**<u>IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR</u>**

**DEPOSITION OF WITNESS**

**R.W.2**

**MCOP No. 127/2020**

| | |
|---|---|
| **Name** | **: அண்ணாதுரை** |
| **Husband's Name** | **: கூத்தன்** |
| **Village** | **: ஒட்டப்பட்டி** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 21.08.2025.**

**எ.ம.சா.2 முதல் விசாரணை:-**

1) நான் நீதிமன்றத்தில் வந்த அழைப்பாணை அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு இந்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியும். இந்த விபத்து எந்த வருடம் நடந்தது என்று ஞாபகம் இல்லை. விபத்தில் கனகராஜ் என்பவர் இறந்து போனார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். சேலத்தில் இருந்து ஒரு அதிகாரி வந்து விசாரித்து அவரிடம் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று தெரிவித்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நான் கையெழுத்து போடவில்லை என்றும் வெள்ளை பேப்பரில் மட்டுமே கையெழுத்து போட்டேன் என்று சொல்கிறார். மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து மட்டும் குறியீடு செய்யப்படுகிறது. அது எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தில் அடிபட்டவுடன் கனகராஜை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு ஆராயி கனகராஜ் பற்றி எனக்கு தெரியும் என்றும் விபத்து நடந்தது பற்றி எனக்கு தெரியும் என்றும் சாட்சியம் அளித்துவிட்டு கனகராஜை

விபத்திற்கு பின்னிட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர் என்று சொன்னால் அவ்வாறு சொன்னார்கள். எப்படி ஆம்புலன்சில் போனார்கள், வேறொரு ஆம்புலன்சில் போட்டு கனகராஜை எடுத்து சென்றார்கள் என்று சொன்னால் அவ்வாறு சொன்னார்கள். எனக்கு வந்த அழைப்பாணையிலேயே எதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்பது குறித்து தெளிவாக சொல்லப்பட்டுள்ளது என்றும் அதை ஒத்துக்கொண்டுதான் கையெழுத்து போட்டு விட்டு அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கும்போது மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே விபத்து ஏற்பட்ட உடன் முதல் ஆம்புலன்சில் உயிருடன் தான் வாழப்பாடி சென்றார் என்றும் வாழப்பாடியில் விபத்து ஏற்பட்ட பின்னிட்டு தான் அவர் உயிர் பிரிந்தது என்று சொன்னால் சரியல்ல.

2) அடிபட்ட உடன் கனகராஜ் உடன் யார் கூட சென்றது என்ற விவரம் தெரியும் என்று சொன்னால் தெரியாது. இரண்டாவதாக நடந்த விபத்தினால் தான் கனகராஜ் இறந்தார் என்றும் மனுதாரர் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டாம் மற்றும் மூன்றாம் மனுதாரர்கள் உறவினர்கள் என்று சொன்னால் அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆராயி எனக்கு தெரியும் அவர் பக்கத்து வீட்டுக்காரர். அவர் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார்.

3) அவர் எப்போது இறந்தார் என்று தெரியாது. அவருக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 60,70 வயது இருக்கும். எனக்கு வழக்கு பற்றி தெரியும் என்றும் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.08.21 05:49:06 +0530

**Accidents Claim Tribunal, Attur.**